தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 ஏப்ரல் 1, சனிக்கிழமை.

பங்குனி 19, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை''.

அறத்தை அறிந்தவனாய், அறிவு நிறைந்து அமைந்த சொல்லை உடையவனாய், எக்காலத்திலும் செயல் செய்யும் திறன் அறிந்தவனாய் உள்ளவன் ஆராய்ந்து கூறும் துணை யாவான்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

1. தகவல் கோரல்.

(அ) பேரவைத் தலைவர் அமைச்சராகப் போவதாக வந்துள்ள செய்தி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் நாங்கள் புறப்படுகிறபோது ஒரு இன்ப அதிர்ச்சியைக் கேள்விப்பட்டோம். பேரவைத் தலைவராக இருந்த நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பதாகவும், மாலை 4 மணிக்குப் பதவி ஏற்க இருப்பதாகவும் கேள்விப் பட்டோம். அப்படி இருந்தால் உங்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து, அது 4 மணிதானா அல்லது நேரம் ஏதாவது மாற்றி வைக்கப்படுகிறதா என்று தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஏப்ரல் 1-ம் தேதி என்பதை என்னுடைய அன்புச் சகோதரர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே நினைவுபடுத்தி இருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர்கள் எனக்குத் தந்திருக்கிற அந்தச் செய்தி அதிர்ச்சியா, இனப அதிர்ச்சியா என்பது எனக்கு விளங்கவில்லை. (சிரிப்பு).

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவரவர்களே, பேரவைத் தலைவர் பதவியைவிட அமைச்சர் பதவி உயர்ந்தது என்ற தவறான கருத்தை இந்தக் கருத்து மூலமாக எழுப்பியிருப்பதனால் தாங்கள் அதை மறுப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்தாலும் நான் அப்படிப்பட்ட ஒரு சிறப்பான பதவி அடைந்தால் வரவேற்பு விழாவில் வந்து வாழ்த்துவதற்குத் தயாராக இருக்கிற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களையும் நான் நெஞ்சார வாழ்த்துகிறேன். எப்போது எந்த நிகழ்ச்சி நடந்தாலும் தொடர்ந்து நீங்கள் என்னை வாழ்த்திக்கொண்டிருக்க வேண்டுமென்று கூறி, உங்களுக்கு நன்றி தெரிவித்து, இப்போது நாம் அடுத்த அலுவலுக்குப் போகிறோம்.

2. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தொல்லை தருவதற்காக வருந்துகிறேன் என்றாலும் சட்டமன்றத்திலே 25-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒட்டி ... .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இது திட்டமிட்டுப் பேசப்படுகிற பேச்சு. அவைக் குறிப்பில் இது ஏறக்கூடாது என்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே, 25-ம் தேதி நடைபெற்ற எந்த நிகழ்ச்சி பற்றியும் அவையில் தொடர்ந்து உரையாடக் கூடாது என்று நான் தெரிவித்திருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எப்போதுமே பேரவைத் தலைவரின் தீர்ப்புக்கு மிகவும் மதிப்பளிப்பவர்கள். எனவே, அவர்கள் ஒவ்வொரு நாளும் பிரச்சினையை எழுப்புவதும் நான் என்னுடைய தீர்ப்பை மீண்டும், மீண்டும், மீண்டும் என்று சொல்வதும், '' கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும் ; கிழவியைத் தூக்கி மணையில் வை '' என்பதைப்போல இருக்கக்கூடாது என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள். (சிரிப்பு)